# பகுதி - 1

## மீனவர் பிரச்சனைகளை தீர்ப்போம் மீன் வளத்தைப் பெருக்குவோம்

# PART - 1

## SOLVING FISHERMEN PROBLEM & DEVELOPING FISHERIES DESOURCES




Fig - 1 கட்டுமரம்/கைப்படகு (Hand Boat)




Fig - 1a கட்டுமரம்/கைப்படகு (Hand Boat)




Fig - 1b - இயந்திரம் பொருத்தப்பட்ட ∴பைபர் படகு
(Fibre - Motorized Boat)




Fig - 1c&d குதிரை சக்தியுடைய மின்கலன்கள்
(H.P-Mechanised Fishing Vessels)

## 2

# தமிழகத்தின் மீன்வளம்–தமிழக மீன்வளர்ச்சி துறை – அரசின் மீன் கொள்கைகள்

# FISHING RESOURCES IN TAMILNADU & DEPARTMENT OF FISHERIES - GOVERNMENT OF TAMILNADU

**அரசின் மீன் கொள்கைகள்** (Government Policies on Fisheries Production and Management)

1. மனித வளத்திற்கு தேவையான புரதச்சத்துள்ள மீன் உணவை பாதுக்காப்பாக வழங்குவது (Supply of Protein Fish Food with Food Security)

2. மீன்பிடி தொழிலில் ஈடுப்பட்டுள்ள மீனவர்களுக்கு நல்ல வாழ்க்கையும், நலத்தையும் பேணிக்காத்தல் (Maintenance of Good livelihood to the fishermen Society)

3. இந்த மீன்பிடி தொழிலின் மூலம் வேலை வாய்ப்பினை உருவாக்குதல் (Employment Generation through this Industry)

4. மீன் வளர்ப்பு முறையினால் சுற்றுச்சூழல் பாதிக்காத விதத்தில் மீன் உற்பத்தியைப் பெருக்குதல் (Fish Production through Eco friendly Aqua Culture Practices)

5. பேரிடர் காலங்களில் மீன் பிடித் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு ஆபத்தான சம்பவங்களை முன்னிட்டு

ஏற்படும் சூழ்நிலைக்களுக்கு, அரசின் சார்பாக இயங்கும் மீனவர்களின் நலவாரியத்தின் வழிகாட்டுதலின்படி நிவாரணம் வழங்கப்படவேண்டும். (Providing Relief Facilities during cyclone periods as per Tamilnadu Fishermen welfare board schemes)

6. மீனவர்களின் அன்றாட வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நலவாரியத்தின் வழிகாட்டுதலின்படி வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். (Improving quality of life of fishermen society)

7. மீன்வளத்தறையின் மூலம் அனைத்து மேம்பாட்டு பணிகள் சிறப்பாக செயல்பட்டு மீன் வளர்ப்பும் மற்றும் ஏற்றுமதியும் உயர்வதற்கும், அதன் மூலம் நாட்டின் பொருளாதரம் பெருகுவதற்கும் முழு ஈடுபாடு கொள்ளவேண்டும். (Administration & Management of all fish production, sales and co-ordinating export activities towards increasing the economic condition of the country by the Fisheries Development System)


## தமிழகத்தின் மீன் வளம் (Fisheries Resources in Tamilnadu):

தமிழகம் அனைத்து துறைகளிலும் கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளது. தமிழக அரசு, **'தமிழக மீன்வளத்துறை'** என்ற அமைப்பை மீன்வளத்துறை அமைச்சரவை மூலம் உருவாக்கி மீன்வளத்துறையில் நல்ல முன்னேற்றத்தை எட்டியுள்ளது. அதிகளவு மீன்பிடிப்பு தொழில் கடலிலும், நிலப்பரப்பில் உள்ள நன்னீர் குளங்களிலும், ஏரிகளிலும் மற்றும் உவர்நீரிலும் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. இந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மீன்பிடி முறைகளை பழங்காலம் முதல் பழைய முறையிலிருந்து நவீன முறை வரை கடைபிடித்து வருகிறார்கள். இந்த வளமான தமிழகத்தில் முன்பு குறிப்பிட்டது போல் கடலோர பகுதி 1076 கிலோ மீட்டர்கள் ஆகும். அதாவது இதன் முதல் பகுதி

சோழமண்டல பகுதியாகும். (Coromandal Coast) சென்னை பழவேற்காடு (Pulicat) முதல் கோடியக்கரை வரையும், இரண்டாம் கடல் பகுதி - பாக் விரிகுடா (Palk Bay) கோடியக்கரையிலிருந்து (Calimere) தனுஷ்கோடி மற்றும் இராமேஸ்வரம் வரை அடங்கிய பகுதியாகும். அடுத்து மூன்றாம் பகுதியாக மன்னார்வளைகுடா என்றும், இது இராமேஸ்வரம் முதல் கன்னியாகுமரி வரை அடங்கிய கடல் பகுதியாகும். அடுத்து நான்காம் பகுதியாக மேற்கு கடல் பகுதியாக அழைக்கப்படுகிறது. இது அரபிக்கடலில் கன்னியாகுமரி முதல் நீரோடை வரை அடங்கியதாகும்.

இந்த கடலோர பகுதிகளில் குறைவான ஆழப்பகுதியும், ஆழமான பகுதியும், பாறைகள் இருக்கும் பகுதியும் மற்றும் கடலுக்குக் கீழ் பவளப் பாறைகள் கொண்ட பகுதிகளும் அடங்கியதாகும். குறிப்பாக கன்னியாகுமரி முதல் சென்னை எண்ணூர், பழவேற்காடு வரை மீன்பிடி பகுதிகளாகும். பழவேற்காடு என்பது சென்னைக்கு அருகிலிலுள்ளது. இது ஒரு பெரிய ஏரியாகும். இங்கு பல மீனவக்குடும்பங்கள் வசிக்கிறார்கள். பலவிதமான மீன்வகைகளும் இந்த ஏரியில் உள்ளது. தமிழகத்தின் மீன்பிடி கடலோர பகுதிகளில் மீன்பிடித் தொழில் நன்றாக நடந்து கொண்டிருக்கிறது. கடலோர பகுதியை குறிப்பிட்ட வரைபடம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## COASTAL AREA IN TAMIL NADU - I, II, III, IV




படம்-2 FIG-2

தமிழகத்தின் கடலோர பகுதிகள்

(Coastal areas in Tamilnadu - I, II, III & IV)

## Brief in English:

Tamilnadu is one of the important coastal states in India in East Coast Line. The coastal line in Tamilnadu is 1076 Kms. with 13 coastal districts, 608 fishing villages and 9 major and 3 medium fishing harbours. It has a continental shelf of 41,412 Sq. Kms. and - its Exclusive Economic Zone. Spreads over 1.9 lakhs Sq.Kms. The Tamilnadu Coast line is **divided into 4 zones**.

1. The coromandal coast extending to **357.2 Kms from Pulicot to Point Calimere (I)**.

2. The palk bay of 293.9 Kms is from the point **Calimere to Dhanushkodi/Rameswaram Area (II)**.

3. The Gulf of Mannar is extending from Dhanushkodi / Rameswaram to Kanyakumari of 364.90 Kms **(III)**.

4. The Western Sector of 60 Kms. of coast line on Arabian Sea is from **Kanyakumari to Neerodai (IV)**.

With above spread, Tamil Nadu has huge rich fishery resources. In the above, the name of the coastal area are **13 fisheries districts** - i.e. Chennai, Thiruvallur, Villupuram, Pudukottai, Thanjavur, Thiruvarur, Thirunelveli, Cuddalore, Kanyakumari, Kanchipuram, Tuticorin, Nagapattinam and Ramanathapuram covering total of 1076 Kms.

**Note**: Tamilnadu is the southern most state in India, flanked by Andhra Pradesh, Karnataka on the north/north west, Indian Ocean on the south, Kerala on the west and Bay of Bengal on the east. The coastline of Tamilnadu has a length of about 1076 kms and it constitutes about a 15% of the total coastal length of India and stretches along Bay of Bengal, Arabian Sea and Indian Ocean.

The details of the coastal length are Chennai 19 Kms, Thiruvallur 27.9 Kms, Villupuram 40.7 Kms, Pudukottai 42.8 Kms, Thanjavur 45.1 Kms, Thiruvarur 47.2 Kms, Tirunelveli 48.9 Kms, Cuddalore 57.5 Kms, Kanyakumari 71.5 Kms, Kanchipuram 87.2 Kms, Tuticorin 163.5 Kms, Nagapattinam 187.9 Kms, and Ramanathapuram 236.8 Kms of total length 1076.0 Kms in this ports, fishing harbours major and medium, variety of coastal industries and coastal villages are situated. Secondly, Government of India has declared in 1991 - Coastal Regulation Zone, which are ecologically sensitive areas - in this, CRZ-1 is Thiruvallur, Cuddalore, Nagapattinam and Ramnad areas are covered as sensitive areas.

## I) கடல்சார் மீன்பிடிப்பு விபரங்கள் (Marine Fisheries):

**Details of marine fisheries sector in Tamil Nadu are given below**:

a. Coastal length - 1076 Kms.
b. Landing Centres/Jetties - 36 and 254 Landing Points
c. Fishing Harbours - 9 Major & 3 Medium Types
d. Ports - 4 Major & 22 Minor Ports
e. Fishing Districts - 13
f. No. of Fishing Villages - 608
g. Fisher Folk Population - 10.07 lakhs
h. The continental shelf 41,412 sq.kms
i. Exclusive economic zone - EEZ - 1.9 lakh sq.km
j. Fishing crafts registered upto 2017 - Machanised Fishing boats - 5861 Nos., Traditional Crafts - Motorised - 30239 and Non Motorised 5427 Nos.
k. Fish Handling Centre (Fish cold storage point) - 1 No. at Pattinapakkam, Chennai (R.A.Puram).

**Name of Some Fisheries Villages/Places**: Pulicot - Pazhaverkadu, Pattinampakkam, Kasimedu (Harbour), Muttukadu, Kalpakkam, Mamallapuram, Marakkanam, Cuddalore, (Karaikal) Nagapattinam, Kodiakkarai, Pamban, Rameswaram, Kilakarai, Tuticorin, Kulasekarapattinam, Kundankulam, Kanyakumari (Muttam, Kolachal & Thengaipattinam).

**Name of Fishing Harbours: 9 Major & 3 Medium**

1. Chennai (Kasimedu), 2. Tuticorin, 3. Chinnamuttam, 4. Mallipattinam, 5. Mandapam, 6. Nagapattinam, 7. Cuddalore, 8. Pazhayar, 9. Kolachal (K.K.District - Muttam, Kolachal & Thengaipattinam) +3 Medium Harbours.

Note:- Karaikal Fishing Harbour - Puduchery Union Teritory.

## II) நன்னீர் மீன்வளர்ப்பு (நிலப்பரப்பில்) :

### Details of Indland fisheries:

The Tamilnadu area covers 3.83 lakh hectares water resources of reservoirs, major irrigation tanks, minor irrigation tanks and short seasonal tanks/ponds/backwaters etc., The further details are given below:

a) Fishery Resources - 3.83 lakh hectare
b) Reservoirs - 78 Nos. - 62,015 hectare
c) Large irrigation and short seasonal tanks - 2,65,819 hectare
d) Brackish water spread area - 56,000 hectare
e) Population of Indland fishers - 2.29 lakhs
f) Fish seed production centres -
    i) Govt fish farms - 8
    ii) Private fish farms - 49

g) Fish seed rearing centres
   i) Government fish farm - 39
   ii) Private fish farm - 180

h) Inland fish production during the year 2016-17-1.97 lakhs tons (from the statistics)

i) Inland fisheries research unit under the control of Dr.MGR Fisheries College and Research Institute, Ponneri is functioning at Madhavaram Milk Complex as an Off-Campus Research Facility for Research Activities - Advanced Research Farm Facility - Madhavaram Milk Complex, Chennai-600 051.

**Note:**

The potential of the inland fisheries is more and fish production has to be further increased. The government has many funding organisations like - National Agriculture Development Programme (NADP), National Fisheries Development Board, (NFDB) Special Area Development Programme (SADP), National Bank for Agriculture and Rural Development (NABARD) for upgrading Government fish farm facilities and encouraging private farmers to create fish seed production/rearing farms and inland fish production through setting up of **Fish Farms**. The fish seed production is being increased by Government organisation towards meeting the total targeted fish production.

குறிப்பு: நன்னீர் மீன் வளர்ப்பு மூலம் **ஒரு கிராமப்புற பொருளாதார வளர்ச்சி மேம்படும்,** Due to Inland Fisheries Development, Village Economics Status will increase.

## III) உவர் நீரில் (உப்பு) மீன் வளர்ப்பு:

**Details of Brackish water fisheries:**

a) Tamilnadu Estimated Area - 56,000 hectares

Note: Coastal Aquaculture - 7,100 hectares (mainly shrimp aquaculture). In Tamilnadu the shrimp aquaculture is more in Thanjavur, Nagapattinam and Cuddalore Districts.

## IV) மீன் வளத்துறை - தமிழக அரசு: Administrative Resources: Department of Fisheries.

The Department of Fisheries constituted by Tamilnadu Government is functioning in Integrated office complex at Chennai-600 015, with good administrative setup under the control of head of the department - Director/Additional Director with Joint Director and 7 regions are headed by Deputy Directors of fisheries and Assistant Directors of fisheries in each district with engineering divisions of 4 (Chennai, Nagapatinam, Tuticorin, Nagarcoil). The above organisation has a total strength of 1689 in different categories and they are doing the best service under the control of the director. All the functions are managed effectively by the department with inland sales and providing safety sea travel to the fisherman with fisherman welfare board. In this head office, other offices like, Tamilnadu Fisheries Development Corporation Ltd., Coastal Aquaculture Authority, Tamilnadu Fishermen Welfare Board, Tamilnadu State Apex Fisheries Co-operative Federation and **Fisheries Central Library** are functioning in different floors.

The entire department is administered by the Ministry of Fisheries Department under the control of Tamilnadu Government. All the details are given in the special note provided at the back pages of this book.

In additional to the above, Tamilnadu Government has established **fisheries education institutes / universities / research centres** under the name of Tamilnadu Dr.J.Jayalalitha Fisheries University - Nagapattinam - 611 002, with various courses in fisheries science and fisheries engineering. All the details are given in the special note provided at the back pages of this text.

**Note 1**: (தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம்) The Tamil Nadu fisheries development corporation functioning in the head office manages purchase of fresh fishes, sales and marketing system effectively in Chennai and Tamilnadu. In Chennai, the department has a cold storage facility/Fish Handling Centre at Pattinapakkam with 6 Nos. of **fish sales shops** and **11 Nos. of fish sale mobile vans** to cater the needs of Chennai people (பச்சை மீன் விற்பனை) and also sales activity is functioning in other districts of Tamilnadu.

**Note 2**: தமிழக மீன் வளர்ச்சித்துறை, நிர்வாகம், மீன் பிடிப்பு கட்டுப்பாட்டு அறை கண்காணிப்பு, மீனவர்கள் பாதுகாப்பு மற்றும் நலன் மீன் விற்பனை போன்ற துறைகளில் சிறப்பாகச் செய்யபட்டு சிகரத்தை எட்டிக் கொண்டிருக்கிறது. (The Directorate of Fisheries under the ministry of Fisheries, Govt., of Tamilnadu is functioning effectively.)

**Note 3**: மத்திய மீன்வளத்துறை - The central Ministry of Fisheries (Govt. of India) is assisting all the states for developing fisheries system.

**Note 4**: SIR F.A. Nicholson. I.C.S Founder - Madras Fisheries Dept & Honorary Director of Fisheries 1907 - 1918.

3

# மீன்வளத்துறையின் சட்டங்கள் மற்றும் விதிகள்

## FISHERIES ACTS / RULES AND REGULATIONS

மீன்வளத்துறையை சிறப்பாகவும், பாதுகாப்பாகவும் செயல்படுத்த அரசாங்கத்தின் மூலம் சட்டதிட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த சட்டத்திட்டங்களின் வழிமுறைகளின்படி மீன்பிடித் தொழிலும் அதை சார்ந்த அனைத்து செயல்பாடுகளும் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. இந்த துறையின் சிறப்பு என்னவென்றால் இதில் இந்திய சட்ட திட்டங்களை மட்டுமின்றி, **ஐக்கிய நாடுகளின் சபையின்** (United Nations) உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு மூலமும் மீன்பிடிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (Fishing in Inland sea area and International sea area). இப்பொழுது சட்டதிட்டங்களின் சரத்துக்கள் பற்றி ஆராய்வோம்.

1. தமிழ்நாடு கடல்சார் மீன்பிடிப்பின் ஒழுங்குமுறை சட்டம் 1983 Tamilnadu Marine Fisheries Regulations Act, 1983.
2. கடல்வழி பொருள்களின் ஏற்றுமதி மற்றும் மேலாண்மை துறை சார்ந்த சட்டம் 1972. Marine products Export development authority Act, 1972.
3. கடல்சார் மீன்பிடிப்பின் சர்வதேச ஐக்கிய நாடுகளின் சட்டதிட்டங்கள். United Nations Acts and Guidelines.

வரிசை எண்- 1 & 2) தமிழ்நாடு கடல்சார் மீன்பிடிப்பின் ஒழுங்குமுறை சட்டம் 1983-ன் படி விசைப்படகு என்பது இயந்திரம் பொருத்தப்பட்டது ஆகும் - Mechanised Fishing Vessel fitted with 15HP to 125 HP Diesel Engine. மித சக்தி வாய்ந்த இயந்திரம். இதன் மூலம் மீன்படி கலனை நகர வைக்கும் சுழலும் தன்மை கொண்ட கருவியை இயக்க உதவுகிறது. (Propeller) இதன் நீளம் 6 முதல் 8 மீட்டர் வரை இருக்கும். (The vessel is fitted with engine and mechanised propulsion and lifting gear system).

மேற்குறிப்பிட்ட மீன்படி கலனில் அதிக சக்தி வாய்ந்த - 125 HP-க்கு மேல் பொருத்தப்பட்ட இயந்திரம் வெகுதூரம்/நடுக்கடல் வரை சென்று மீன்பிடிக்க உதவுகிறது. இதுதான் ஆழ்கடல் மீன்பிடி கலன் ஆகும். இதன் நீளம் 15 மீட்டர் கொண்டதாகும். (Deep sea fishing vessel with more than 125 HP fitted engine and having length more than 8 metres). இதன் மூலம் 6 அல்லது 10 மீனவர்கள் வரை கடலில் பயணம் செய்து அதிகளவு மீன் பிடித்து வரலாம். இந்த இரண்டு மீன்பிடி கலன்களும் 8 நாட்டிகல் மைல்கள் (8 NM) தூரத்திற்கு மேல் சென்று மீன்பிடிக்க வேண்டும். (As per the conditions stipulated in the schedule of the Act, the above fishing vessels shall carry the fishing operation beyond 8 Nautical Mile in the sea).

சிறிய இயந்திரம் பொருத்தப்பட்ட படகு - Motorized Boat - Fibre - Mostly made out of fibre material (Plastic). இதன் மூலம் 2 அல்லது 3 மீன்பிடித் தொழிலாளர்கள் கடலில் பயணம் செய்து ஒரு கனிசமான அளவு மீன் பிடித்து வரலாம்.

அடுத்து, பழங்காலமாக உபயோகித்து வரும் கட்டுமரம் மற்றும் கைப்படகு ஆகும். இதில் மரத்திலான கைப்படகும் Synthetic Fibre மூலம் தயாரிக்கப்பட்ட கைப்படகும் அதிகமாக கடலில் 8 நாட்டிக்கல் மைல் தூரம் வரை மட்டும் சென்று 1 அல்லது 2 மீனவர்கள் கட்டுமரத்திலும் 3 முதல் 4 மீனவர்கள் பைபர் கைப்படகிலும் கடலில் சென்று மீன்பிடித்து வருகிறார்கள். (Country Boats made out of wood and fibre material including catamaran)

மேற்குறிப்பிட்ட அனைத்து படகுகளும் அரசுத்துறையில் முறையாக **பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்** (All the fishing the vessels should be registered U/s 11 of the marine products export development Authority Act, 1972 - The owner of the fishing vessel should obtain licence for using the fishing vessel in any specified area of the sea and it should be renewed once in 3 yrs.) (Note: 1. Deep Sea fishing vessel, 2. Mechanised fishing vessel, 3. Motorized boat (Fibre and Wooden type) 4. Hand boat and Cattamaran are the types of fishing equipments/vessels are used for fishing.

**Note** :- கடலாமைகள் பாதுகாக்கப்பட்ட விளங்கினங்களாக இந்திய வன விலங்குச் சட்டம் 1972-ல் பட்டியலிடப்பட்டிருக்கிறது.

**இப்போது UN Acts and Guidelines பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளது**

3) கடல்சார் மீன்பிடிப்பின் சர்வதேச ஐக்கிய நாடுகளின் சட்டதிட்டங்கள். United Nations Acts and Guidelines.
ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு மேற்கொள்ளும் மீன்பிடிப்பு நடவடிக்கைகள் பற்றி ஆராய்வோம். இதில், மீன் பிடிப்பு - மனித இனத்திற்கு மிகவும் முக்கியமான உணவு கிடைக்கும் தொழிலாகும். ஆகவே, மீன் பிடிப்பு தொடர்ந்து தொன்றுதொட்டு நடந்து வருகிறது. 1982-ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பு உருவாக்கிய கடல் சட்டம், கடல்சார் ஆதாரங்களையும் கடல்சார் தொழிலையும் நல்ல முறையில் நிர்வாகிக்க உதவுகிறது. இதில் உள்ள முக்கிய சட்டங்களை பற்றி ஆராய்வோம். இதில் உள்ள சட்ட சாரத்துக்கள் அட்டவணைப்படியும் வரிசை எண்படியும் கொடுக்கப்பட்டுள்ளது.

(In 1982, UN Acts and Guidelines were established)

a) அத்தியாயம் 1-ல் குறிக்கோள் மற்றும் 8-ன் வழிமுறைகளின்படி கடல்வாழ் ஆதாரங்களை

பாதுகாத்தல் மற்றும் மக்களுக்கு உணவு அளித்தல் முக்கிய பணியாகும். (As per objective of the Act, Protection of the coastal area and providing fish food is the important function).

b) இதில் 8-வது அத்தியாயம் படி மீன்பிடிப்பு நடவடிக்கைகள் பொறுப்பான முறையில் நடைபெறுவதை உறுதிபடுத்த தேவையான செயல்முறைக்கு அறிவுரை வழங்குவதாகும். இதன்படி கீழ்க்கண்ட பொருள்களின் விவரங்கள் நன்கு புரியும்படி வரையறுக்கப்படுகிறது. (Advices)

i) மீன்பிடி கலன், ii) மீன் பிடிப்பவர், iii) உரிமையாளர், iv) மேலாளர், v) வாடகைக்கு அமர்த்துபவர், vi) மீன்பிடி பாதுகாப்பு கலன். இதில் முக்கியமாக மீன் பிடிப்பவர் பற்றி நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அதாவது - **மீன்பிடிப்பவர் எனின்** (Fishermen) - கரையிலிருந்தோ அல்லது மிதக்கும் மேடையிலிருந்தோ (Country Boats) அல்லது மீன்பிடி கலனிலிருந்தோ (Fishing Vessel) நடைபெறும் மீன்பிடிப்பு நடவடிக்கையில் பங்கு கொள்பவர்.

**மீன்பிடி கலன்** எனின் - கடல்வள ஆதாரங்களை வர்த்தக ரீதியில் அறுவடை செய்ய உபயோகப்படுத்தும் இயந்திர சக்தியுடன் இயங்கும் ஒரு உபகரணம் ஆகும். (Fishing Vessel fitted with Engine/HP) இதில் தாய் கலன் மற்றும் நேரிடையாக மீன் பிடிக்க உதவும் சிறிய கலன்களும் அடங்கும். (Major Fishing Vessel & Small Fishing Vessel)

c) அடுத்து, 8.1-ன் விதியின் படி, மீன்பிடிப்பில் ஈடுபடுவோருக்கு கீழ்க்கண்ட **நிலைகளை** ஏற்படுத்தி கடைப்பிடிக்க வேண்டும். (Good condition)

2.1-ல்) மீன்பிடிப்பில் ஈடுபடுவோருக்கு போதுமான பாதுகாப்பு வழங்க வேண்டும், ii) மீன் பிடிப்போர் மற்றும்

மீன்பிடி கலன் உரிமையாளர்களுக்கு தேவையற்ற பொருளாதார நெருக்கடி வராமல் பாதுகாத்தல் மற்றும் மீன்பிடி மேலாண்மை முறைகளை கையாளுதல், iii) மீன்பிடிப்பு சமயத்தில் ஏற்படும் பிரச்சனைகளை கருத்தில் கொண்டு அதற்கு ஆலோசனை வழங்குதல்.

2.2-ல்) மீன்பிடிப்பிற்கு கீழ்க்கண்ட அங்கீகாரங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். i) அங்கீகரிக்கப்பட்ட மீன்பிடி நடவடிக்கை பற்றி தகவல்கள் அதாவது அங்கீகரிக்கப்பட்ட மீன் பிடிப்பவரின் பெயர் (வயது 18 முதல் 65 வரை) முகவரி, உறுப்பினர் எண்., மீன்பிடி கலனின் விபரம், டோக்கன் எண். இவையனைத்தும் அங்கீகாரத்தில் இடம்பெற வேண்டும். (Registered Fishermen Details should be available before sea fishing voyage) ii) மீனவர்களுக்கு உட்பட்ட எல்லையில் உள்ள நீர்நிலைகளின் பருவநிலை/ நிலைமைகளை அந்தந்த நாடுகள் நாட்டில் அடங்கிய மாநில பாதுகாப்பு சார்ந்த அரசு நிர்வாகம் அடிக்கடி மீனவர்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும். iii) மீன்பிடிப்பிற்கான அங்கீகாரத்தில் உள்ள நிபந்தனைகளான, மீன்பிடிக்கும் பகுதி, பிடிக்கப்படும் மீன் வகைகள், கலன்களின் குறிப்புகள் மற்றும் மீன்பிடி சாதனங்களின் குறிப்புகள், காலம்/ பருவகாலத்தில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் / கட்டுப்பாடுகள் இவையனைத்தும் அடங்கியதாகும். iv) மீன்பிடிப்பு நடவடிக்கையான சட்டம் அமுலாக்குதல் / எச்சரித்தல் / கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் பாதுகாப்பு முறைகளை அந்தந்த நாடுகள் அந்தந்த நாடுகளின் மீன்துறை அமைப்பு மூலம் கண்காணித்து செயல்படுத்த வேண்டும்.

மேலும் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள அனைவரும் நடைமுறையில் உள்ள அனைத்து கட்டுப்பாடுகள் அனைத்தையும் அறிந்திருக்கிறார்களா? என்பதை

உறுதிப்படுத்த வேண்டும். அதே சமயம், தவறான நடத்தைகளுக்கு விதிக்கப்படும் அபராதம் மற்றும் தண்டனை ஆகியவைகளை தெரிந்திருக்க வேண்டும் மற்றும் முறையான **தொடர்பு சாதனங்கள்** (Communication System) - கைபேசி/VHS போன்றவைகளை உபயோகிப்பது பற்றியுள்ள செயல்படுத்தும் அறிவை தெரிந்திருப்பது குறித்து உறுதிப்படுத்த வேண்டும். (Ensure Full Knowledge of the **operation of the communication system** by the fishermen society as per Rules and Guidelines)

2.3-ல்) ஐக்கிய நாடு சபைகள், மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் திறமையுடன் பணிகளை கவனிக்க அடிப்படை கல்வியும், பயிற்சியும், தொழில்நுட்பமும் தெரிந்திருக்க வேண்டுமென்ற நிலையை அந்தந்த நாடுகள்/அரசாங்கம் ஏற்படுத்தி தரவேண்டுமென்று வலியுறுத்துகிறது. குறிப்பாக, அவ்வப்போது பயிற்சி கொடுத்து பயிற்சி பெற்ற மீன்பிடி தொழிலாளர்களுக்கு சான்றுதல் வழங்க வேண்டும். குறிப்பாக விசைப்படகுகள் இயக்கும் தொழிலாளர்களுக்கு அதை இயக்கும் விதமும், அதில் ஏற்படும் கோளாறுகளை சரிபார்க்கும் பராமரிப்பு வேலையையும் தெரிந்திருக்க வேண்டும். இந்த பகுதியில் அவர்களுக்கு **முறையான பயிற்சி** கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், பொதுவாக மீனவர்கள் குறைந்த அளவில்தான் படித்திருக்கிறார்கள். ஆகவே அனைவருக்கும் முறையான மீன்பிடிப்பு பற்றியும் அதன் பாதுகாப்பு பற்றியும் **நல்ல பயிற்சி கொடுக்க வேண்டும்.** இது **அரசாங்கத்தின் கடமையாகும்.** (Necessary basic education, training about the operation of the fishing vessel and system including maintenance of the engine and drive system should be given by the government as a **training course**)

2.4-ல்) i) அனைத்து மீன்பிடி நடவடிக்கைகளும் பாதுகாப்பான முறையில் நடக்கிறதா (Safety System) என்பதை அந்தந்த நாடுகளின் சம்மந்தப்பட்ட அரசாங்கமும், அதன் துறைகளும் உறுதி செய்ய வேண்டும். ii) கடலில் மீன் பிடித்து கொண்டிருக்கும் பொழுது துயர சம்பவங்களை உடனே மீன்பிடி துறைமுகத்திற்கும், மற்றும் அருகாமையில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் மீன்பிடி கலன்களுக்கும் முறையான தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டும். இதற்கு முறையான தொலைதொடர்பு வசதிகள் அரசாங்கம் ஏற்படுத்தித் தர வேண்டும். இதைக் கண்காணிக்கும் கட்டுப்பாட்டு அறைகளில் பணிபுரியும் பொறியாளர்கள் மற்றும் கணினி இயக்குநர்கள் சம்மந்தப்பட்ட மீட்பு படைக்கு (Relief Team) உடனே தொடர்பு கொண்டு மீனவர்களை ஆபத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். ஒரு வேளை கடலில் பக்கத்து நாட்டு பகுதியில் மீன் பிடித்தால் அதனுடைய தொலைத் தொடர்பு விவரங்களையும் அதாவது பன்னாட்டு தொலைத் தொடர்பு முறைகளை தெரிந்திருக்க வேண்டும். (Information about International Sea control room details)

iii) கடல் பயணத்தில் உள்ள வானிலை மற்றும் கடலின் சீற்றங்கள் போன்ற தகவல்களை மீன்பிடிப்போர் அறியும் வகையில் அந்தந்த மீன்பிடி கிராமங்களிலும் மற்றும் துறைமுக பகுதிகளிலும் ஒளிப்பரப்பு மூலம் முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். (Effective communication should be provided by the government in co-ordination with Indian Metrological Department, Indian Coast Guard Authorities and Control Room Authorities regarding the condition of the sea and tidel waves so as to give alert to the fishermen to have safe journey through satellite and VHP system and to prevent fishing during cyclonic period.)